நாள்: 15.07.2026

OP.285/2025
பெயர் சுவாதி
ம.சா.1

<u>குறுக்கு விசாரணை</u>

நான் எம்.எஸ்.சி, பி.எட். முதுநிலை பட்டதாரி. நான் தற்சமயம் போட்டித்தேர்வுகளுக்கு படித்து வருகிறேன். வேலை பார்க்கவில்லை. என்னுடன் பிறந்த சகோதரி ஒருவர் உள்ளார். என் தங்கையும் முதுநிலை பட்டதாரி. என் தாயார் 12 ம் வகுப்பு வரைபடித்துள்ளார். என் தந்தை காவல்துறையில் சிறப்பு சார்பு ஆய்வாளராக உள்ளார். என்னுடைய திருமணம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணம். என் கணவர் PHD., டாக்டர் பட்டம் பெற்றுள்ளார். திருமணத்திற்கு முன் என் கணவர் அமெரிக்காவில் பேராசிரியராக வேலை பார்ப்பதாக சொன்னார்கள். எனது மாமனார், மாமியார் தினமும் மலை வேலைக்கு செல்கிறார்கள். திருமணத்திற்கு முன்பு என் கணவரிடம் தினமும் அரை மணி நேரம் செல்போனில் பேசுவேன். என் தாயார் என் கணவருடன் பேசுவார். எனது திருமணம் 30.08.2024 ல் நடைபெற்றது. திருமண வரவேற்பு 03.09.2024 பழனியில் வைத்து நடைபெற்றது. திருமணத்திற்கு பிறகு தேனிலவுக்காக என் கணவர் விமானத்தில் அந்தமான் அழைத்து சென்றார். அந்த செலவுகளை என் கணவர் தான் ஏற்றுக்கொண்டார். எனக்கு ரூ.15,000/—மதிப்புள்ள பொருட்களை பரிசாக வாங்கி கொடுத்தார். அந்தமானில் இருந்து திரும்பி தலை தீபாவளி வரை என் கணவர் ஊரான அம்மாப்பட்டியில் எனது மாமனார் மாமியாருடன் குடியிருந்து வந்தோம். அமெரிக்காவில் இருந்து வந்த பின்னர் எனது கணவர் இனிமேல் அமெரிக்கா செல்ல மாட்டேன் என்றும், தர்மபுரியில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் வேலைக்குசேரப்போவதாக சொன்னார். என் கணவர் தர்மபுரிக்கு செல்ல முயற்சித்த போது என் தயார் தான் அதை தடுத்தார் என்றால் சரியல்ல. தலை தீபாவளிக்கு என் கணவர் பழனி வந்த போது எங்கள் பெற்றோர் வீட்டில் என் கணவருக்கு வேலையில்லை என சுட்டிக்காட்டி பிரச்சனையை செய்தார்கள் என்றால் என் கணவர் எனக்கு பாலியல் ரீதியாகவும் பல தொந்தரவு கொடுத்ததால் அந்த பிரச்சனை ஏற்பட்டது. அதனால் என் கணவர் 02.11.2024 ம் தேதி மீண்டும் அவரது பெற்றோர் ஊரான அம்மாபட்டிக்கு வந்துவிட்டார். அதன் பின்னர் என் தாயார் ஜோதிடம் ரீதியாக எங்களுக்குள் தடையிருப்பதால் எங்கள் ஊர் பழனியில் வைத்து நாக தோச

பூஜை செய்தார்கள் என்றால் சரிதான். அதன் பின்னர் 24.11.2024 ம் தேதியன்று என் பெற்றோர்கள் மீண்டும் என் கணவர் ஊரான அம்மாபட்டியில் கொண்டு வந்துவிட்டார்கள். 24.11.2024 முதல் 06.02.2025 வரை நான் அம்மாபட்டியில் இருந்தேன் என்றால் சரிதான். அப்போதும் எங்களுக்குள் பிரச்சனை இருந்தது. 07.02.2025 முதல் 09.02.2025 வரை மூன்று நாட்கள் திருவனந்தபுரம் சுற்றுலா அழைத்து சென்றார். அவரது அக்கா வீட்டிற்கு நானும், என் சகோதரியும், என் கணவரும் சென்று அங்கிருந்து சுற்றுலா தலங்கள் சுற்றி பார்த்தோம். அதன் பின்னர் 10.02.2025 க்கு நாங்கள் பழனி சென்று விட்டோம்.

அதற்கு மறுநாள் 11.02.2025 அன்று என் கணவருக்கு சீனாவில் வேலை கிடைத்திரு'ப்பதாகவும், அதற்கு மருத்துவ பரிசோதனை செய்ய கோயமுத்தூர் சென்று விட்டார் என்றால் சரிதான். பின்னர் கோயமுத்தூர் சென்று விட்டு பழனி வந்த உடன் எங்கள் வீட்டில் பிரச்சனை ஏற்பட்டது. என் தந்தை அரசாங்கத்தில் வேலை எப்படியாவது வேலை வாங்கி கொடுப்போம் வெளிநாடு செல்ல வேண்டாம் என கேட்டுக்கொண்டார் என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணை வாக்குமூலம் பத்தி 4 ல் 10.01.2025 அன்று என் கணவர் கொடுமைகளுக்கு பயந்து என் தாயாரை உத்தமபாளையத்திற்கு வரவழைத்து பழனிக்கு சென்று விட்டேன். அதன் பின்னர் எந்த சமாதானத்திற்கும் இரு தரப்பினரும் ஒப்புக்கொள்ளவில்லை என்றால் சொன்னது தவறு தான். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலம் 3 வது பத்தியில் என் கணவர் என்னிடம் பிரச்சனை செய்தது சம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். என் பெற்றோர்கள் குடும்பத்தை அனுசரித்து செல்ல வேண்டும் என்று சொன்னதால் அவ்வாறு செய்தேன். என் கணவர் சர்க்கரை வியாதி புண்ணை ஆற்றும் மருந்ததை கண்டறிந்து அதற்கு காப்புரிமை பெற்றுள்ளார் என்றால் அது பற்றி தெரியாது. இப்போது தான் தெரிந்து கொண்டேன். என் கணவர் ஆராய்ச்சிக்காக உலகத்தில் மிகச்சிறந்த பேராசிரியர் KANG EN TANG என்பவரிடம் ஆராய்ச்சி மாணவராக இருந்து பல ஆராய்ச்சி கட்டுரைகள் சமர்பித்துள்ளார் என்றால் ஆராய்ச்சி பண்ணுவதாக என்னிடம் சொன்னார். 11.02.2025 அன்று என் கணவர் பழனியில் இருந்து சென்ற பின்னர் என் தகப்பனார் என் கணவரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு 22.02.2025 அன்று கம்பத்திற்கு வர சொன்னார் என்றால் சரிதான். கம்பத்தில் சமாதானம் பேசும் போது என் தந்தை என் கணவரிடம் விவாகரத்து

கொடுக்கவில்லை என்றால் வெட்டி கொலை செய்துவிடுவேன் என மிரட்டினாரா என்றால் மிரட்டவில்லை. குடும்ப பெரியோர்கள் சமாதானம் பேசினார்கள். எனக்கு பாலியல் ரீதியாக துன்புறுத்தல் இருந்ததால் அதை என் தந்தை அங்கு சமாதானம் பேச வந்த ஒரு தாத்தாவிடம் கூறினார். என்னுடைய மனு மற்றும் முதல் விசாரணை வாக்குமூலத்தில் என் கணவர் எனக்கு பாலியல் ரீதியாக துன்புறுத்தல் செய்தார் என்பதை சொல்லவில்லை என்றால் சரிதான். அது வேண்டாம் என விட்டுவிட்டேன். திருமணத்திற்கு முன்னர் என் கணவர் அடிக்கடி பழனி வருவார் அடிக்கடி சந்தித்து பேசுவோம் என்றால் சரியல்ல அவர் வரும்போது என் குடும்பத்தார்கள் உடன் இருந்தனர். திருமணத்திற்கு முன்னர் என் கணவர் பழனிக்கு வரும் போது நானும் என் கணவரும் பலமுறை பாலியல் சீண்டல்கள், செய்தோம் என்றால் சரியல்ல ஒருமுறை மட்டும் அவர் என்னை கட்டிபிடித்து முத்தம் கொடுத்துள்ளார். என் கணவர் என் மீது மிகுந்த அன்பும், பாசமும் கொண்டு அவர் நல்ல மனநிலையில், நல்ல அறிவுள்ள நபர் வெளிநாடுகளில் வேலை பார்த்த வேலையை கூட விட்டு விட்டு என்னுடன் சேர்ந்து வாழ தயாராக உள்ளார் என்றால், நான் சேர்ந்து வாழ தயாராக இல்லை. எனவே நான் தாக்கல் செய்துள்ள விவாகரத்து மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. என்னுடைய தாயாரின் தூண்டுதலின் பேரில் தான் என் கணவருடன் சேர்ந்து வாழமல் இந்த விவாகரத்து மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எம்.எஸ்.சி படித்த பட்டதாரி ஆறு மாதமாக என் கணவர் என்னை பாலியல் ரீதியாக துன்புறுத்தியதால் தான் சுயமாக முடிவு செய்து இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன்.

M SHIVAJI CHELLIAH Digitally signed by M SHIVAJI CHELLIAH

சார்பு நீதிபதி

உத்தமபாளையம்